## பாடம் 8 கூட்டாண்மை விலகல்

## 2 மதிப்பெண் வினாக்கள்

1. D,E,F என்ற கூட்டாளிகள் முறையே 5 : 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். F என்பவர் விலகுகிறார். அவருடைய பங்கை D மற்றும்,E 2 : 1 எனும் விகிதத்தில் எடுத்துக்கொள்கின்றனர். புதிய இலாப பகிர்வு விகிதம் காண்க
2. D,E,F என்ற கூட்டாளிகள் முறையே 5 : 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். E என்பவர் விலகுகிறார். அவருடைய பங்கை D மற்றும்,F சம விகிதத்தில் எடுத்துக்கொள்கின்றனர். புதிய இலாப பகிர்வு விகிதம் காண்க
3. D,E,F என்ற கூட்டாளிகள் முறையே 5 : 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். D என்பவர் விலகுகிறார். அவருடைய பங்கை E முழுவதுமாக எடுத்துக்கொள்கின்றனர். புதிய இலாப பகிர்வு விகிதம் காண்க
4. பானுமதி, பாரதி, சாந்தி என்ற கூட்டாளிகள் முறையே 5 : 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 2017 ஏப்ரல் 1 அன்று சாந்தி விலக முடிவெடுத்தார். அந்நாளில் இலாப நட்ட கணக்கு வரவு இருப்பாக ரூ 60,000 இருந்தது. குறிப்பேட்டு பதிவு தருக
5. பானுமதி, பாரதி, சாந்தி என்ற கூட்டாளிகள் முறையே 5 : 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 2017 ஏப்ரல் 1 அன்று சாந்தி விலக முடிவெடுத்தார். அந்நாளில் இலாப நட்ட கணக்கு பற்று இருப்பாக ரூ 120,000 இருந்தது. குறிப்பேட்டு பதிவு தருக
6. பானுமதி, பாரதி, சாந்தி என்ற கூட்டாளிகள் முறையே 3 : 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 2017 ஏப்ரல் 1 அன்று சாந்தி விலக முடிவெடுத்தார். அந்நாளில் பொதுகாப்பு ரூ 80,000 இருந்தது. குறிப்பேட்டு பதிவு தருக

## 3 மதிப்பெண் வினாக்கள்

7. தினேஷ், அம்மாசி,சக்திவேல் என்ற கூட்டாளிகள் முறையே 5 : 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அம்மாசி விலக முடிவெடுத்தார். நிறுவனத்தின் நற்பெயர் ரூ 80,000 என மதிப்பிடப்பட்டது கீழ்காண்பவனவற்றிற்கு குறிப்பேட்டு பதிவுகளை தருக
   அ. நற்பெயர் நிறுவன ஏடுகளில் இல்லாமலிருந்தால்
   ஆ. ஏடுகளின் நற்பெயர்மதிப்பு ரூ 60,000 ஆக இருந்தால்

இ. ஏடுகளின் நற்பெயர் மதிப்பு ரூ 1.00.000 ஆக இருந்தால்

8. நித்யதர்ஷினி, இந்திராணி, புஷ்பாவதி என்ற கூட்டாளிகள் முறையே 5 : 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். புஷ்பாவதி என்பவர் 2017 ஏப்ரல் 1 அன்று விலகினார். அவரின் விலகலுக்கு பின் அனைத்து சரிகட்டுதல்களும் செய்த பிறகு அவரின் முதல் கணக்கு வரவு இருப்பாக ரூ 2,00,000 ஆக காட்டுகிறது. பின்வருவற்றிற்கு குறிப்பேட்டு பதிவுகள் தருக

அ. சேரவேண்டிய தொகை உடனடியாக செலுத்தப்பட்டால்

ஆ. சேர வேண்டிய தொகை உடனடியாக செலுத்த வில்லை என்றால்

இ. ரூ 50,000 உடனடியாகவும், மீதித் தொகை பிறகு செலுத்துவதென்றால்

9. நித்யா, ராணி, புஷ்பா என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 : 1 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர் பின்வரும் நிறுவன சொத்துகள், பொறுப்புகள் மறுமதிபீட்டுக்குட்பட்டு புஷ்பா என்பவர் விலக முடிவெடுத்தார்

அ. கட்டிடத்தின் மதிப்பு ரூ 66,000 மதிப்பேற்றம் செய்வது

ஆ. பதிவு பெறா முதலீடுகள் ரூ 12,000 கணக்கில் கொண்டுவருவது

இ. சரக்கிருப்பு மீது ரூ 6,000., அறைகலன் மீது ரூ 3,000 தேய்மானம் நீக்குவது

ஈ. பற்பல கடனாளிகள் மீது ரூ 3,000 போக்கெழுதுவது

தேவையான பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டு கணக்கினை தயார் செய்க

10. நவீன்,நிதின் என்ற கூட்டாளிகள் 7:5 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர் அவர்களின் 2004 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு பின் வருமாறு.

| பொறுப்புகள் | | சொத்துகள் | |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 40,000 | வங்கி | 52,000 |
| பொதுக்காப்பு | 72,000 | பற்பல கடனாளிகள் | 40,000 |
| தொழிலாளி ஈட்டுத்தொகை நிதி | 60,000 | சரக்கிருப்பு | 72,000 |
| முதல் கணக்குகள்: | | இயந்திரம் | 1,60,000 |
| நவீன் 1,20,000 | | இலாபநட்டகணக்கு | 48,000 |
| நிதின் 80,000 | 2,00,000 | | |
| | 3,72,000 | | 3,72,000 |

2005 ஜனவரி 1 ஆம் நாள் நிதின் கூட்டாண்மையிலிருந்து விலகினார். பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நவீன் என்பவர் நிறுவனத்தை எடுத்துக் கொண்டார்.

(அ) நிறுவனத்தின் நற்பெயர் ரூ.36,000 என மதிப்பீடு செடீநுயப்பட்டது.

(ஆ) இயந்திரம் மீது தேடீநுமானம் 10% நீக்கப்பட்டது.

(இ) பற்பல கடனாளிகள் மீது 5% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்பட்டது.

(ஈ) தொழிலாளர் ஈட்டுத்தொகை நிதிப் பொறுப்பு ரூ.36,000 என மதிப்பிடப்பட்டது.

மறுமதிப்பீட்டுக் க/கு, முதல் கணக்குகள் மற்றும் நவீனின் இருப்புநிலைக்குறிப்பு ஆகியவற்றைத் தயார் செய்க